



மாணவர் பெயர் : .....

- **1 , 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவிற்குப் பொருத்தமற்ற உருவைத் தெரிவு செய்க.**


1.




(1)



(2)



(3)



2.




(1)



(2)



(3)



3. கீழே தரப்பட்டுள்ள கவிதையில் விபரிக்கப்பட்டுள்ள பறவையைத் தெரிவு செய்க.

மரக்கிளையில் குனிந்து - இரைதேடும்
பகலில் உறங்கி - இரவில்
உறங்குபவர்களை பயமுறுத்தும்

(1)



(2)




(3)




- **4 , 5 ஆகிய வினாக்களில் கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து அவற்றுள் பொருத்தமான உருச் சோடியைத் தெரிவு செய்க.**

4.



1. AC – BD
2. AB – CD
3. AD – BC


5.




1. AB – CD
2. AC – BD
3. AD - BC

- **6 , 7 ஆகிய வினாக்களில் கீழே தரப்பட்டுள்ள உருவை அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.**

6.




(1)




(2)




(3)




7.




(1)




(2)



(3)




8. உருவில் விடுபட்ட பகுதியைப் பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.



(1)



(2)



(3)



LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk


● **9 , 10 ஆகிய வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**

குண்டு குண்டாய் நண்பனுடைய
விலாசம் எழுதுவேன்
குறைவில்லாமல் அஞ்சல் தலையை
உறைமேல் ஒட்டுவேன்


9. நண்பனுடைய விலாசம் எப்படி எழுத வேண்டும்?
(1) குண்டு குண்டாய் (2) குறைவில்லாமல் (3) அழகாய்

10. அஞ்சல் தலை என்பது எதைக் குறிக்கிறது?
(1) கடிதம் (2) முத்திரை (3) கடித உறை

● **11 , 12 ஆகிய வினாக்களில் வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.**

11. 


(1) 15
(2) 9
(3) 18


12. 


(1) 37
(2) 39
(3) 45

13. 9 m 60 cm நீளமுள்ள ஒரு கம்பியால் ஆக்கப்பட்ட சம பக்க முக்கோணியின் ஒரு பக்கத்தின் நீளம் யாது?
(1) 232 cm (2) 320 cm (3) 230 cm

14. ஒரு லீப் வருடத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கும், சாதாரண வருடத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கும் இடையிலுள்ள வித்தியாசம்
(1) 365 (2) 20 (3) 01

15. 
படத்தில் தரப்பட்டுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை
(1) 8
(2) 7
(3) 9

16. 
ஒரு சிறிய போத்தலின் கொள்ளளவு 200 மில்லிலீற்றர் எனின் பெரிய போத்தலின் கொள்ளளவு யாது?
(1) 2 லீற்றர்
(2) 3 லீற்றர்
(3) 1 லீற்றர்

17. 
தரப்பட்டுள்ள உருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியை குறிப்பது
(1) $\frac{3}{4}$ (2) $\frac{1}{2}$ (3) $\frac{1}{4}$

18. 5 மனிதர்கள் ஒரு குறிப்பிட்ட வேலையை செய்து முடிக்க 4 நாட்கள் எடுக்கின்றனர். அதே வேலையை 2 நாட்களில் செய்து முடிக்க எத்தனை மனிதர்கள் பேர் தேவை?
(1) 20 (2) 10 (3) 8


19. கடையொன்றில் விசுக்கோத்து பைக்கற்றின் விலை ரூபா 55.00 என இருந்தது. ரூபா 330.00 ஐ வைத்திருந்த அபூர்வி தன்னிடமிருந்த பணத்தில் எத்தனை விசுக்கோத்து பைக்கற்றுக்களை வாங்குவாள்?
(1) 6 (2) 5 (3) 7

- **20, 21 ஆம் வினாக்களில் உள்ள கூற்றுக்கு சரியான கூற்றைத் தெரிவு செய்க.**

20. பெண் வெளவால் முட்டைகள் மஞ்சள் நிறத்தில் இருக்கும்.
    (1) வெளவால்களின் முட்டைகள் பச்சை நிறத்தில் இருக்கும்.
    (2) வெளவால்களின் முட்டைகள் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.
    (3) வெளவால்கள் குஞ்சுகள் மூலம் இனப்பெருக்கம் செய்கின்றன.

21. சூரியன் கிழக்கில் மறையும் போது இருள் பரவுகிறது.
    (1) இருள் எங்கும் பரவுவதில்லை.
    (2) சூரிய அஸ்தமனம் இல்லை.
    (3) சூரியன் மேற்கில் மறைகின்றது.

- **22, 23 ஆகிய வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.**


A


B


C


D

22. பரப்பளவு கூடிய உரு எது?
    (1) A (2) B (3) C

23. சமனான பரப்பளவுடைய உருக்கள் எவை?
    (1) A யும், B யும் (2) B யும், C யும் (3) C யும், A யும்

24. முதலாந் திகதி ரூபாய் 50.00ஐ தனது உண்டியலில் இட்ட சிவானி, அடுத்த நாளில் இருந்து தினமும் ரூபாய் 20.00 ஐ உண்டியலில் இடுகின்றாள் எனின், எந்த நாளில் உண்டியலில் ரூபா 200.00 இற்கு அதிகமாக சேமிக்கப்படும்?
    (1) 10ம் திகதி (2) 9 ஆம் திகதி (3) 11ம் திகதி


- **25 , 26 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தெரியும் விதத்தை தெரிவு செய்க.**

25. 
    (1) 
    (2) 
    (3) 

26. 
    (1) 
    (2) 
    (3) 

27. 5 வயது நிறைவடைந்த அனைத்து பிள்ளைகளும் கட்டாயம் பாடசாலைக்குச்செல்ல வேண்டும். சுஜீவனுக்கு 7 வயது. அதற்கேற்ப சரியான கூற்றைத் தெரிவு செய்க.
    (1) சுஜீவன் பாடசாலைக்குச் செல்வதில்லை.
    (2) சுஜீவன் பாடசாலைக்குச் செல்கின்றான்.
    (3) சுஜீவனுக்கு இன்னும் பாடசாலைக்குச் செல்லும் வயது வரவில்லை.


28. நிமல் காலை வேளையில் வடக்குத் திசை நோக்கி நடந்தான் எனின், அவனது நிழல் விழுவது?
    (1) இடது பக்கம் (2) வலது பக்கம் (3) முன் பக்கம்

29. 

இவ்வுருவில் உள்ள செவ்வகங்கள், முக்கோணிகள் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
    (1). செவ்வகங்களின் எண்ணிக்கை முக்கோணிகளின் எண்ணிக்கைக்குச் சமன்.
    (2). செவ்வகங்களின் எண்ணிக்கை முக்கோணிகளின் எண்ணிக்கையிலும் கூடியது.
    (3). முக்கோணிகளின் எண்ணிக்கை செவ்வகங்களின் எண்ணிக்கையிலும் குறைந்தது.

www.lkedu.lk

● **30, 31 ஆகிய வினாக்களிற்கு கீழே தரப்பட்டுள்ள படத்தினை அவதானித்து சரியான விடையினைத் தெரிவு செய்க.**



30. காட்டில் வாழும் விலங்குகள், தோட்டத்தில் வரும் விலங்குகள், பாலைவனத்தில் உள்ள விலங்குகள் என படம் காட்டுகின்றது எனின், B யினால் குறிக்கப்படுவது

(1) காட்டில் வாழும் விலங்குகள் (2) தோட்டத்தில் வரும் விலங்குகள் (3) காடு மற்றும் தோட்டத்தில் வரும் விலங்குகள்

31. D என்ற எழுத்தினால் குறிக்கப்படும் ஒரு விலங்கு

(1) மாடு (2) ஒட்டகம் (3) சிங்கம்


32. அலுவலகத்தில் நிறுத்தப்பட்ட கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை 10 ஆகும். அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 28 எனின், அங்கு நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் எத்தனை?

(1) 2 (2) 4 (3) 6


33. தீபா பேருந்தில் ஏற வரிசையில் நின்றாள். அவளுக்கு முன்னால் 12 மாணவர்களும், பின்னால் 6 மாணவர்களும் நின்றனர் எனின், வரிசையில் உள்ளோர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 17 (2) 19 (3) 18


● **34 , 35 ஆகிய வினாக்களிற்கு கீழே தரப்பட்டுள்ள படங்களின் விலைகளையும் நிறைகளையும் அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.**



நிறை - 300 g
விலை - ரூபா 21.00





நிறை - 500 g
விலை - ரூபா 17.00



நிறை - 250 g
விலை - ரூபா 9.00

34. இரு பக்கமும் உள்ள பழங்களின் விலைகள் சமனாக உள்ள விடையைத் தெரிவு செய்க?

(1)  (2)  (3) 

35. மேலே தரப்பட்ட பழங்களின் நிறைகளின் படி அதிகமான நிறையுடைய பழத்திற்கும், குறைவான நிறையுடைய பழத்திற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

(1) 175 g (2) 200 g (3) 50 g

36. ஏறுவரிசையில் எழுதப்பட்ட விடையைத் தெரிவு செய்க.

(1) 500, 495, 701, 806 (2) 100, 250, 560, 559 (3) 196, 227, 341, 449

37. திலீபன் மற்றும் சுமதியின் வயதுகளின் கூட்டுத்தொகை 17 வருடங்களாகும். சுமதியை விட திலீபன் 3 வயது மூத்தவன் எனின், சுமதியின் வயது எத்தனை?

(1) 10 வருடங்கள் (2) 9 வருடங்கள் (3) 7 வருடங்கள்

38. ரூபாய் 92.50 பெறுமதியான பொருள் ஒன்றை வாங்கிய குமுதன் ரூபாய் 100.00 தாள் காசை கொடுக்கும் போது, அவனுக்கு மீதியாக 50 சத நாணயக் குற்றிகளை கடைக்காரர் கொடுத்தார் எனின், குமுதனுக்கு கிடைத்த 50 சத நாணயக்குற்றிகள் எத்தனை?

(1) 15 (2) 12 (3) 10

39. விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட 90 தேங்காய்களில் ½ வாசி பழுதடைந்துள்ளன. எஞ்சிய தேங்காய்களை 3 சம குவியல்களாக ஆக்கினால், ஒரு குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

(1) 30 (2) 15 (3) 10

40. A - அருமைக்குஞ்சு மூன்றையும் B - கூடு ஒன்றைக் கட்டியே C - அதில் வளர்த்து வந்தது D - குருவி ஒன்று மரத்திலே

மேலே உள்ள பாடல் வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அர்த்தமுள்ள பாடலாக அமையுமாறு ஒழுங்குபடுத்தும் சரியான விடை.

(1) DCAB (2) DBAC (3) ACDB

www.ikeou.lk



மாணவர் பெயர் : .....

● **பின்வரும் பாடலை நன்றாக வாசிக்க.**

பாதையில் நாமும் போகையிலே
பார்த்துக் கவனமாய்ச் சென்றிடுவோம்
வீதியொழுங்கைப் பேணி நிதம்
விபத்திலிருந்து காத்திடுவோம்

சிவப்பொளி கண்டால் நின்றிடுவோம்
மஞ்சள் ஒளியில் உசாராவோம்
உவக்கும் பச்சை ஒளி கண்டால்
உவகை கொண்டு புறப்படுவோம்

1. கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பாடலிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) பாதையில் நாம் எவ்வாறு போக வேண்டும்? .....

(ii) விபத்திலிருந்து எவ்வாறு நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்? .....

(iii) சிவப்பொளி கண்டால் யாது செய்ய வேண்டும்? .....

(iv) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள ஒத்தக்கருத்துள்ள சொற்கள் இரண்டை எழுதுக. .....

(v) வீதியொழுங்கை என்பதை பிரித்து எழுதுக. .....

(vi) இப்பந்தியில் இடம்பெறும் எதிர்கால வினைச்சொற்கள் இரண்டை எழுதுக.

1. ..... 2. .....

2. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) ஆற்றங் ..... யில் ஒரு பெரிய ஆலமரம் உள்ளது. (கறை / கரை)

(ii) உடையில் இருந்த இரத்தக் ..... அவன் செய்த குற்றத்தைக் காட்டிக் கொடுத்தது. (கறை / கரை)

(iii) உங்களுக்கு ..... (எவ்வளவு / எத்தனை) புத்தகங்கள் வேண்டும்?

(iv) கிராமியப் ..... (பாடல் / பாடல்கள்) மிகவும் எளிமையானவை.

3. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும், பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.

(i) "வைத்தியர்" உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (.....)

(ii) "வாகனங்கள்" அ.·.றிணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (.....)

4. வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) மரங்கள் சரிந்து ..... (விழுந்தது. / விழுந்தன.)

(ii) சூரியன் காலையில் ..... (உதித்தது. / உதித்தன.)

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்

தமிழ் மொழி மூலம்



ENGLISH MEDIUM

සිංහල මාධ්‍ය

இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

(iii) அவன் நன்றாகப் படித்துப் பரீட்சையில் ..... (சித்தியடைந்தார். / சித்தியடைந்தான்.)

(iv) நீளமான பாம்பு சிறிய தவளையை துரத்திப் ..... (பிடித்தது. / பிடித்தன.)

5. கீழே தரப்பட்டுள்ள ஆண்பால் வாக்கியத்தை பெண்பால் வாக்கிமாக மாற்றி எழுதுக.

நான் நண்பனின் வீட்டிற்குச் சென்றேன். : .....

6. கீழே தரப்பட்டுள்ள இறந்த கால வாக்கியத்தினை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

(i) நான் ஒரு கவிதை எழுதினேன். : .....

(ii) அவர்கள் மைதானத்தில் விளையாடினார்கள். : .....

7. இணைமொழியைப் பூர்த்தி செய்க.

(i) நீட்டி : ..... (ii) அக்கம் : .....

8. ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

(i) போட்டனர் / போட்டியில் / கோலங்கள் / பல / கோலப் / மாணவிகள்

.....

(ii) நாயைக் / பூனை / கண்ட / துள்ளிக் / ஓடியது / குதித்து

.....

9. பின்வரும் கருத்துக்குரிய பழமொழியை எழுதுக.

உத்தம நட்பு : .....

10. பின்வரும் சுருக்கக் குறியீட்டின் விரிவை எழுதுக.

(i) அ.ப : ..... (ii) ம.ப.ப : .....

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(i) Mango : ..... (ii) Office : .....

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)  : .....

(ii)  : .....

13. வெற்றிடத்தில் வரவேண்டிய சொல்லை எழுதுக.

(i) we ..... (is, are) playing cricket (ii) He ..... (is, are) going to school.

14. “ம(Dh)துருவா” என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக. : .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

“ஆசிரியர் வருவாரா?” : .....

16. பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக. 8008 : .....

17. பின்வரும் எண்களை இறங்கு வரிசைப்படுத்துக. 8528, 3620, 6230, 4305 : .....

18. 9035 எனும் எண்ணின்,

(i) “0” இன் இடப்பெறுமானம் யாது? ..... (ii) “9” இலக்கம் குறிக்கும் பெறுமானம் யாது? .....

19.

435	241
365	305

(i) இரண்டு எண்களைக் கூட்டினால் 676 கிடைக்கும். அவ்வெண்களை எழுதுக. : .....

(ii) இரண்டு எண்களுக்கிடையில் வித்தியாசம் 60 ஆக வரும் எண்களை எழுதுக. : .....


www.ikeedu.lk

20. 

A மற்றும் B யிலுள்ள அப்பிள் பழங்களின் மொத்த நிறை யாது? : ..... g

21. அடுத்து வரும் எண்களை எழுதுக. 78, 75, 72, 69, ... , ...

22. பை ஒன்றில் 25 kg சீனியும், மற்றொரு பையில் 14 kg 500 g சீனியும் உள்ளது. இரண்டு பைகளிலும் உள்ள மொத்த சீனியின் அளவு யாது?
: ..... Kg..... g


23.  தரப்பட்டுள்ள சமபக்க முக்கோணியில் சமச்சீர் அச்சுக்களை வரைக.

24. ஒரு பெட்டியில் 5 பந்துகள் உள்ளன. அவ்வாறான 75 பெட்டிகளில் உள்ள பந்துகளின் மொத்த எண்ணிக்கை யாது?
: .....

25. 648 புத்தகங்களை ஒவ்வொரு பிள்ளைக்கும் 2 வீதம், எத்தனை பிள்ளைகளுக்கு வழங்கலாம்?
: .....

26. அட்டவணையை நிரப்புக.

பொருட்கள்	1kg இன் விலை		வாங்கிய அளவு	விலை	
	ரூபாய்	சதம்		ரூபாய்	சதம்
பருப்பு	180	00	500g	(i)	.....
சீனி	200	00	(ii)	400	00
மொத்த விலை				490	00

27. 

4602 என்ற எண்ணை கீழே தரப்பட்டுள்ள எண்சட்டத்தில் குறிக்குக.


28. 8 m 50 cm கயிற்றிலிருந்து 2 m 70 cm கயிற்றுத்துண்டை வெட்டி எடுத்தால் எஞ்சும் கயிற்றின் நீளம் யாது? : ..... m ..... cm

29. வெற்றிடத்திற்குள் வரவேண்டிய எண்ணை எழுதுக.

	A	4	3	2
+	3	B	6	2
	6	3	9	4

(i) A : .....

(ii) B : .....

30. 

அருகிலுள்ள வரைபைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) பெரும்பாலான மாணவர்கள் விரும்பும் உணவு எது? : .....

(ii) உணவுகளை விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? : .....

● **31 தொடக்கம் 60 வரையான வினாக்களுக்கு சரியான விடையினைத் தெரிவு செய்க.**

31. சூரிய நமஸ்காரத்தின் படிமுறைகள்
(1) 12 (2) 14 (3) 5

32. இலங்கையின் தேசிய கீதத்தினை இயற்றியவர்
(1) ஆனந்த தர்மபால (2) மு.நல்லதம்பி (3) ஆனந்த சமரக்கோன்

33. கொத்துத் தொழிலில் பயன்படுத்தப்படும் உபகரணம்
(1) மணியாசு (2) துறப்பணம் (3) அரம்

34. எட்டுக்கால்கள் கொண்ட உயிரினம்
(1) தேள் (2) ஈ (3) சிலந்தி

35. பொதி செய்யப்பட்ட உணவினை வாங்கும் போது அவதானிக்க வேண்டிய விடயம்
(1) உற்பத்தித் திகதி (2) காலாவதியாகும் திகதி (3) பொருளின் நிறை

36. உணவை மாசுபடுத்தும் உயிரினம்
(1) நுளம்பு (2) எலி (3) அணில்

37. தேசியக் கொடியிலுள்ள நான்கு அரச இலைகளும் குறிப்பது
(1) மெத்தா, கருணா, முதிதா, சாரகா (2) மெத்தா, தாரகா, முதிதா, கருணா (3) மெத்தா, கருணா, முதிதா, உபேக்ஷா

38. ஒரு பொருளின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கை தரச்சான்றிதழ் எது?
(1) SLS (2) ISO (3) SOS

39. காந்தத்தால் கவரும் பொருள்
(1) தங்கம் (2) வெள்ளி (3) இரும்பு

www.ikeduk

40. உடலைப் பந்து போல் உருட்டிக் கொள்ளும் பிராணி.

(1) ஆமடில்லா (2) நத்தை (3) மரவட்டை

41. தேசியக் கொடி ஏற்றும் போது நாம்

(1) அலட்சியத்துடன் நிற்க வேண்டும். (2) நிமிர்ந்து நிற்க வேண்டும். (3) பயத்துடன் நிற்க வேண்டும்.

42. கரோல் கீதங்களை நடத்தும் மதத்தினர்

(1) பௌத்தர்கள் (2) இந்துக்கள் (3) கிறிஸ்தவர்கள்

43. நோயிலிருந்து உடலை பாதுகாக்கும் உணவுகள் மட்டுமே உள்ளது

(1) அரிசி, பலாப்பழம், ரொட்டி (2) பால், கீரை, கொழுப்புணவு (3) கரட், மாம்பழம், இலைக்கஞ்சி

44. மண்ணரிப்பிற்கு காரணமாக அமைவது

(1) மரங்களை நடுதல் (2) மண் அகழ்தல் (3) புற்கள் வளர்த்தல்

45.  இங்கு காட்டப்பட்டுள்ள போக்குவரத்து விளக்கில் காணப்படாத நிறம்

(1) சிவப்பு (2) பச்சை (3) ஊதா

46. தரமான தேயிலையை நீரில் இடும் போது தோன்றும் நிறம்

(1) கபிலம் (2) இளம்மஞ்சள் (3) மஞ்சள்

47. இலைகளின் கீழ் முட்களைக் கொண்ட தாவரம் எது?

(1) தூதுவளை (2) நெல்லி (3) கற்றாளை

48. உலக சிறுவர் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?

(1) ஒக்டோபர் 5 (2) ஒக்டோபர் 1 (3) ஒக்டோபர் 6

49. நெல் அறுவடையின் போது உள்ளீடற்ற நெல்லை எவ்வாறு அழைப்பர்?

(1) விதை (2) அரிசி (3) பதறு

50. தொற்று நோய் அல்லாதது எது?

(1) அம்மை (2) கண்நோய் (3) நீரிழிவு நோய்

51. எமது சூழலில் பரவும் நுளம்புகளை கட்டுப்படுத்த சிறந்த முறை

(1) நுளம்பு வலைகளைப் பாவித்தல். (2) நுளம்பு முட்டைகள் காணப்படும் இடங்களை கண்டுபிடித்து அழித்தல்.

(3) நீர் தேங்கி நிற்கும் இடங்களை அழித்தல்.

52.  இது பயன்படாத சாதனம்

(1) திசைகாட்டி (2) மோட்டார் சைக்கிள் (3) கடிகாரம்

53. விலங்குகளிடமிருந்து தாவரங்களுக்கு ஏற்படும் ஒரு தீமை

(1) பூக்களின் மகரந்த சேர்க்கை (2) விதைகளைப் பரப்புதல் (3) தாவரப் பாகங்களை உண்ணுதல்

54. அரச மற்றும் தனியார் வங்கிகளினால் வழங்கப்படும் சேவை அல்லாதது

(1) கடன் வழங்குதல் (2) குறைந்த விலையில் மருந்துகளை விநியோகித்தல் (3) பணப்பரிமாற்றம்

55. ஒரு நூலகத்தில் நாம் நடந்து கொள்ள வேண்டியது

(1) புத்தகங்களைக் கிழித்தல் (2) அமைதியாக படித்தல் (3) தொலைபேசியில் உரையாடுதல்

56. மாணவர்களிடம் இருக்க வேண்டிய நடத்தை

(1) ஒழுக்கம், பொறுமை, கிளர்ச்சி (2) சுயநலம், ஒழுக்கம், பொறுமை (3) ஒழுக்கம், பொறுமை, அமைதி

57. ஒரு தாவரம் அதிக பூக்களை உற்பத்தி செய்வது

(1) தண்டில் (2) நன்றாக சூரிய ஒளி கிடைக்குமிடத்தில் (3) நிழலான கிளைகளில்

58. உலகப் புகழ்பெற்ற மோனாலிசா ஓவியத்தை வரைந்தவர்?

(1) டாவின்சி (2) நியூட்டன் (3) தொலமி

59. இலங்கையில் திறந்தவெளி மிருகக் காட்சிச்சாலை அமைந்துள்ள இடம் எது?

(1) தெஹிவளை (2) யால (3) பின்னவல

60.  இக் குறியீடு குறிப்பது.

(1) மீள்சுழற்சி (2) இப்பக்கம் மேலே (3) உடையக் கூடியது.

61. **"எமது பாடசாலை அழகானது"** எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக அமைதல் வேண்டும்.)

(i) .....

(ii) .....

(iii) .....

www.ikeedu.lk